தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 04.09.2023

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சின்ன வெங்காயத்திற்கான விலை முன்னறிவிப்பு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறி விப்பு திட்டமானது, சின்ன வெங்காய த்திற்கான விலை முன்னறிவிப்பை வெளியிட்டுள்ளது.

சின்ன வெங்காயம் தென்னிந்தியாவில் அதிகம் பயிரிடப்படுகிறது. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி ( 2022-23), தமிழ்நாட்டில் சின்ன வெங்காயம் 0.46 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 5.53 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. திண்டுக்கல் , திருப்பூர், பெரம்பலூர், திருச்சி மற்றும் நாமக்கல் ஆகியவை சின்னவெங்காயம் உற்பத்தி செய்யும் மாவட்டங்க ளாகும். தமிழ்நாட்டில் 80 சதவிகிதம் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது.

வரும் மாதங்களில் சின்ன வெங்காயத்தின் விலை சீராக இருக்கும் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது , தமிழக சந்தைகளுக்கு கர்நாடகாவில் மாநிலம் சாம்ராஜ் நகரிலிருந்து வரத்து வருகிறது. மேலும், இன்னும் ஓரிரு வாரங்களில் கர்நாடகாவில் உள்ள கொள்ளேகாலிலும், தமிழ்நாட்டின் உடுமலைபேட்டை மற்றும் தாராபுரத்திலிருந்தும் வரத்து வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விலை முன்னறிவிப்பு குழு திண்டுக்கல் சந்தைகளில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், வரும் அக்டோபர் 2023 மாத இறுதி வரை தரமான சின்ன வெங்காயம் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ .45 முதல் 48 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும் , கர்நாடகவிலிருந்து வரும் வரத்து மற்றும் பருவ மழையை பொறுத்து சின்ன வெங்காயத்தின் விலையில் மாற்றங்கள் இருக்கும், எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் சந்தை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


1. உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
   வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-2431405
2. இயக்குனர் மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரி
   நீர்மற்றும் புவியியல் ஆய்வு மையம்
   தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
   கோயம்புத்தூர் 641003
   தொலைபேசி : 0422-6611278


**தொழில்நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்
காய்கறிப் பயிர்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641003
தொலை பேசி – 0422 –6611374


***மக்கள் தொடர்பு அலுவலர்***